# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **148/2015**

ஆணை எண். **163/2016**

நாள் : **05/10/2016**

**திரு. என். ஆறுமுகம்,**
**கே.கே. புதூர்,** — **முறையீட்டு மனுதாரர்**
**கோயம்புத்தூர் – 641 038.**

**உதவி ஆணையாளர்,**
**மேற்கு மண்டலம்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி,**
**கோயம்புத்தூர் – 641 002.** — **எதிர் மனுதாரர்**

கோயம்புத்தூர் மாநகராட்சி, கே.கே.புதூர், எண். 7. நாச்சிமுத்து லே அவுட் பிரதான சாலை முகவரியில் வசிக்கும் திரு. என். ஆறுமுகம் அவர்களின் 10.07.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.07.2015 அன்று பெறப்பட்டு 148/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி, கே.கே.புதூர், எண்.7, நாச்சிமுத்து லே அவுட் பிரதான சாலை முகவரியில் வசித்து வரும் திரு. என். ஆறுமுகம் என்பவர், மேற்படி மாநகராட்சியில் பழைய வார்டு எண். 61, புதிய வார்டு எண்.13, இராமசாமி லே அவுட் மனை எண்.1–ல் உள்ள கட்டிடத்திற்கு, வரிவிதிப்பு எண்.160398–ன் படி சொத்து வரி கூடுதலாக விதிக்கப்பட்டுள்ளதாகவும், கூடுதலாக வசூலித்த தொகை ரூ.2,17,441/– ஐ திரும்ப வழங்க ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையர் (பொறுப்பு) அவர்களிடம் 01.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது, சொத்து வரி விதிப்பு சம்பந்தமாக மனுதாரர் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினைத் தொடர்ந்து

30.05.2012 நாளிட்ட மாநகராட்சி கடிதத்தில் சொத்து வரி விதிப்பது குறித்து விரிவான விளக்கம் மனுதாரருக்கு வழங்கியதாக உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்படி கடிதத்தில் 20.12.1993 நாளிட்ட கட்டிட உரிம எண்.82/93/119–ல் 1636 சதுர அடி தரை தளம் கட்ட மனுதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், ஆனால் 2768 சதுர அடி குடியிருப்பு கட்டிடம் கட்டியதின் காரணமாக கூடுதலாக கட்டப்பட்ட1132 சதுர அடிக்கு(12.00 Unit ) மாநகராட்சி விதிகளின்படி 01.10.1993 முதல்அபராத கட்டணம்(12 X 50 ) ரூபாய் 600/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது பின்பு மாநகராட்சி மன்ற தீர்மானத்தின்படி அபராதக் கட்டணம் 01.04.2006 முதல் ரூ.300/– ஆக குறைக்கப்பட்டுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 21.09.2002 நாளிட்ட அறிவிப்பு எண்.4633–ல் அறிவித்தபடி 30.05.2012 வரை அபராதத் தொகையினை மனுதாரர் செலுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது மாநகராட்சி விதிகளின் படி கட்டிட அனுமதிக்கு கூடுதலாக கட்டப்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் பின்பற்றும் நடைமுறையின்படியே மனுதாரர் கட்டிடத்திற்கும் அபராதத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. கட்டிட அனுமதிக்கு மாறாக கூடுதல் பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குப்பின் மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு சொத்து வரிவிதிப்பு முறைப்படுத்தப்பட்டுள்ளது. சட்டவிதிகளுக்கு உட்பட்டு மனுதாரரின் கட்டிடத்திற்கு சொத்து வரி நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்க இயலாது என தெரிவித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. என். ஆறுமுகம்,
எண்.7, நாச்சிமுத்து லே அவுட் பிரதான சாலை,
கே.கே. புதூர் அஞ்சல்,
கோயம்புத்தூர் – 641 038.

உதவி ஆணையர்,
மேற்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் – 641 002.

/உண்மை நகல்/

ர். பழனிவேல்

செயலாளருக்காக.